TAMIL NADU LEGISLATURE LIBRARY
22 JUN 1979
MADRAS

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

——

வியாழக்கிழமை, 1978 மார்ச் 9.

——

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தூனேரியில் மருத்துவமனைக் கட்டடம்.

* 481. வினா—திரு. கே. உச்சி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தாலுக்கா, தூனேரியில் உள்ள அரசு மருத்துவமனைக்கான புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டதா ?

(ஆ) இல்லையெனில், தாமதத்திற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) 1977-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தாலூகா தூனேரியில் உள்ள ஆதார நல நிலையத்தில் மருந்துகக் கட்டிடமும் பணியாளர் குடியிருப்பும் ரூபாய் 4.90 இலட்சம் செலவில் கட்ட அனுமதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கட்டிட வேலை பொதுப்பணித் துறை கட்டிட தலைமைப் பொறியாளர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வேலை நடந்து வருகிறது. கட்டிடம் 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதியில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) இக்கேள்வி எழாது.

திரு. கே. உச்சி : அந்தப் பகுதியில் ஏராளமான கிராம மக்கள் படுக்கை வசதி கொண்டஆஸ்பத்திரி இல்லாமல் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, அதில் சற்று விரைவாக வேலைகளை முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

[1978 மார்ச் 9

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : இக்கட்டடத்தின் பல பகுதிகள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. இக்கட்டடங் களுக்கு கட்டும் பணிக்கு 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி வரையிலும் ரூபாய் 2,12,542 செலவழிக்கப் பட்டுள்ளது. விரைவில் முடிவுறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறையார் மருத்துவ மனை.

*482. வினு—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பொறையார் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் :

இல்லை.

திரு. எஸ். கணேசன் : என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒரே பெரிய அரசு மருத்துவமனை அது. அங்கே மிகப் பெரிய இடத்தில் அது அமைந்திருக்கிறது. கட்டடங்கள், துணைக் கட்ட டங்கள் நிரம்ப இருக்கின்றன. போதிய மருந்தும் திறன் வாய்ந்த மருத்துவர்களும் இல்லாத காரணத்தால் அண்டை மாநிலமாக இருக்கக்கூடிய பாண்டிச்சேரி மாநிலத்திலுள்ள காரைக்கால் மருத்துவமனைக்கு அந்தப் பகுதியில் இருக்கும் பெருவாரியான மக்கள் சென்று வைத்தியம் செய்து கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறையைப் போக்க அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : பொறையார் அரசு மருத்துவமனையில் தற்போது 30 படுக்கைகள் உள்ளன. இப் போதைக்கு படுக்கை வசதிகள் போதுமானதாகக் கருதப் படுகிறது. ஆகவே, மேற்படி அரசு மருத்துவமனையை விரிவு படுத்தும் திட்டம் எதுவும் இப்போதைக்கு இல்லை. அவசியம் ஏற்படும்போது மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.